OL/2016/81/T-I, II (NEW)

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

81 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

කෘෂි හා ආහාර තාක්ෂණය I, II
விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் I, II
Agriculture and Food Technology I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் I

கவனிக்க :
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

1. இலங்கையின் நீர்ப்பாசனக் கைத்தொழில் விருத்திக்கு ஆற்றிய உன்னத சேவை காரணமாக, 'மின்னேரியத் தெய்வம்' எனப் போற்றப்பட்ட அரசன்,
(1) பராக்கிரமபாகு (2) வசபன் (3) மகாசேனன் (4) அக்போ

2. வருடாந்த மழைவீழ்ச்சி, குத்துயரம் ஆகியவற்றின் அடிப்படையில், இலங்கையானது பல்வேறு விவசாயக் காலநிலை வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2 500 மில்லிமீற்றருக்கும் அதிக வருடாந்த மழைவீழ்ச்சியையும் 900 மீற்றருக்கும் அதிக குத்துயரத்தையும் கொண்ட விவசாயக் காலநிலை வலயம்,
(1) தாழ்நாட்டு ஈர வலயம் எனவாகும் (2) மேல்நாட்டு ஈர வலயம் எனவாகும்
(3) தாழ்நாட்டு இடை வலயம் எனவாகும் (4) மத்தியநாட்டு ஈர வலயம் எனவாகும்

3. காலநிலைப் பரமாணங்கள் தொடர்பான சில கூற்றுகள் வருமாறு,
A - சாரீரப்பதன் சதவீதத்தில் குறித்துக் காட்டப்படும்.
B - காற்றின் வேகம் மணிக்கு கிலோமீற்றரில் அளவிடப்படும்.
C - ஒளிச்செறிவு லக்ஸ் எனும் அலகில் குறிப்பிடப்படும்.
இவற்றுள் சரியான கூற்றுகள்,
(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) B, C ஆகியன மாத்திரம். (4) A, B, C ஆகிய எல்லாம்.

4. மண் மாதிரிகள் நான்கில் அடங்கியுள்ள மண் கூறுகளின் சார் நூற்று வீதங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

	நீர் (%)	வளி (%)	கனிப்பொருள்கள் (%)	சேதனப் பதார்த்தங்கள் (%)
A	45	05	25	25
B	25	25	45	05
C	05	45	25	25
D	25	05	25	45

இவற்றுள் பயிர்ச்செய்கைக்கு மிகப் பொருத்தமான மண் மாதிரி,
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

5. மழைத்துளிகள் நிலத்தில் விழுவதன் காரணமாக, மண் துணிக்கைகள் ஒன்றிலிருந்தொன்று பெயர்க்கப்பட்டு வேறாக்கப்படல் சிதறல் அரிமானம் எனப்படும். இவ்வாறு மண் துணிக்கைகள் பெயர்க்கப்படுவதை இழிவாக்கத்தக்க உபாயமுறையாக அமைவது,
(1) சமவுயரக் கோட்டில் உழுதலாகும். (2) நிலத்தில் படிகட்டுகள் அமைத்தலாகும்.
(3) மண்ணுக்கு மூடுபடையிடலாகும். (4) சோல்ற் (SALT) வேலியிடலாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

6. குறித்தவொரு பயிர்செய் நிலமொன்றிலிருந்து பெறப்பட்ட மண் மாதிரியை, சிறிதளவு ஈரமாக்கி உள்ளங்கைகளுக்கு இடையில் வைத்து உருண்டையாக்க முயன்றபோது அது பயனளிக்கவில்லை. இந்த அவதானிப்புக்கு அமைய, இது
(1) மணல் மண்ணாகும். (2) களி மண்ணாகும்.
(3) களி இருவாட்டி மண்ணாகும். (4) மணல் இருவாட்டி மண்ணாகும்.

7. யாதேனுமொரு மண்ணில் பயிர்ச்செய்கையை சிறப்பாக மேற்கொள்வதற்கு அந்த மண்ணில் நிலவ வேண்டிய ஈரலிப்பு மட்டம் பற்றிய சரியான கூற்று எது?
(1) நிரம்பல் நிலையில் காணப்பட வேண்டும்.
(2) வயற் கொள்ளளவு நிலையில் காணப்பட வேண்டும்.
(3) நிரம்பல் நிலை, வயற் கொள்ளளவு நிலை ஆகியவற்றுக்கு இடையில் காணப்பட வேண்டும்.
(4) வயற் கொள்ளளவு நிலை, வாடற் புள்ளி ஆகியவற்றுக்கு இடையில் காணப்பட வேண்டும்.


8. மண்ணின் கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவு தங்கியிருப்பது, அம்மண்ணிலுள்ள
(1) மணல், அடையல் ஆகியவற்றின் அளவின் அடிப்படையிலாகும்.
(2) மணல், பரல் ஆகியவற்றின் அளவின் அடிப்படையிலாகும்.
(3) உக்கல், அடையல் ஆகியவற்றின் அளவின் அடிப்படையிலாகும்.
(4) களி, உக்கல் ஆகியவற்றின் அளவின் அடிப்படையிலாகும்.

9. விஞ்ஞானமுறைத் தாவர வகைப்படுத்தலுக்கு அமைய, அரிக்கேசியேக் குடும்பத்தைச் சேர்ந்த பயிர் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) மா (2) இஞ்சி (3) இறப்பர் (4) தென்னை

10. நெற்தாவரத்தின் தாவரவியற் பெயரை சரியாகக் கொண்ட விடை சரியாகக் காட்டப்படுவது
(1) *Oryza sativa* L. (2) *Oryza sativa* (3) Oryza sativa L. (4) Oryza sativa

11. பின்வரும் செயற்பாடுகளுள் இடைப்பண்படுத்தற் செயற்பாடுகள் ஆவன,
(1) மட்பாளங்களை வெட்டுதலும் புரட்டுதலுமாகும்.
(2) மண்கட்டிகளைத் தூர்வையாக்குதலும் மட்டப்படுத்தலுமாகும்.
(3) நடுகைக்குழி அமைத்தலும் பாத்தியமைத்தலுமாகும்.
(4) செடிகளுக்கு அண்மையிலுள்ள மண்ணை இளக்குதலும் செடிகளுக்கு மண் அணைத்தலுமாகும்.

12. கீழே தரப்பட்ட உரு ABCD யில், எரித்தல் மூலம் தொற்றுநீக்கலை மேற்கொள்ளவென வைக்கோல் மற்றும் உமி ஆகியன படைபடையாக இடப்பட்ட நாற்றுமேடைப் பாத்தி காட்டப்பட்டுள்ளது. அம்புக்குறிகள் மூலம் காற்று வீசும் திசை காட்டப்பட்டுள்ளது.



மிகச் சிறப்பாக தொற்றுநீக்கல் நிகழ்வதற்கென தீ மூட்டுதல் ஆரம்பிக்கப்பட வேண்டியது நாற்றுமேடையின்,
(1) பக்கம் AB யிலாகும் (2) பக்கம் AD யிலாகும்
(3) பக்கம் BC யிலாகும் (4) பக்கம் DC யிலாகும்

13. பின்வரும் நீர்ப்பாசன முறைகளில் மிக அதிகளவு நீர் தேவைப்படும் முறையாக அமைவது,
(1) சால் நீர்ப்பாசனமாகும். (2) பரவல் நீர்ப்பாசனமாகும்.
(3) பாத்தி நீர்ப்பாசனமாகும். (4) தூவல் நீர்ப்பாசனமாகும்.

● **14** மற்றும் **15** ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் செயற்பாடுகளைத் துணையாகக் கொள்க.

A - மண்ணுக்கு மூடுபடையிடல்
B - மண்ணுடன் இரசாயனப் பசளையைக் கலத்தல்
C - பயிர்செய் நிலத்தில் வடிகால் அமைத்து கற்கள் இடப்பட்டு மூடப்படல்
D - களைகளை அகற்றுதல்

14. மண்ணீர்க்காப்பு முறைகளாகப் பயன்படுத்தக் கூடியன,
(1) A, B ஆகியன மாத்திரமாகும். (2) A, D ஆகியன மாத்திரமாகும்.
(3) B, C ஆகியன மாத்திரமாகும். (4) C, D ஆகியன மாத்திரமாகும்.

15. நீர்வடிப்புக்கெனப் பயன்படுத்தத்தக்கது,
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

16. பின்வரும் பொருட்களுள் தரம் மிக்க பசுந்தாட் (இலைப்) பசளையாகப் பயன்படுத்த மிகப் பொருத்தமான பொருளாவது,
(1) உலர்ந்து விழும் காய்ந்த இலைகளாகும். (2) நன்கு முதிர்ச்சியடைந்த பசிய தாவர இலைகளாகும்.
(3) இளம் இப்பில் இப்பில் இலைகளாகும். (4) அரை முதிர்ச்சிநிலை கொண்ட கிளிரிசீடியா இலைகளாகும்.

17. செங்கபில நிறமானதும் பளிங்காகக் காணப்படுவதும் நீரில் நன்கு கரையக் கூடியதுமான இரசாயனப் பசளை,
(1) யூரியாவாகும். (2) மும்மை சுப்பர் பொசுப்பேற்றாகும்.
(3) மியூறியேற்றுப் பொட்டாசாகும். (4) பாறை பொசுப்பேற்றாகும்.

18. தாவர போசணைக்கு இன்றியமையாத நுண் போசணை மூலகங்களை மட்டும் கொண்ட தெரிவு எது?
(1) நாகம், செம்பு, நைதரசன், கல்சியம் (2) மகனீசியம், பொட்டாசியம், கல்சியம், கந்தகம்
(3) செம்பு, போரன், நைதரசன், பொசுபரசு (4) நாகம், செம்பு, மங்கனீசு, போரன்

19. பின்வருவனவற்றுள் மேட்டு நிலத்தில் வளரும் அகன்ற இலைக் களை யாது?
(1) கோரை (2) கோழிச்சூடன் (3) நீர்ப்புளி (4) சீதேவியார் செங்கழுநீர்


20. பயிர்களிற்கு ஏற்படும் கீழ்ப்பூஞ்சண நோய், துரு நோய் ஆகியவற்றுக்கான நோய்க்காரணி எது?
(1) பற்றீரியா (2) பங்கசு
(3) வைரசு (4) பைற்றோபிளாஸ்மா


21. குக்கர்பிற்றேசியேக் குடும்பப் பயிர்களின் இலைகள், வேர்கள் ஆகியவற்றிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும், பூரண உருமாற்றத்தைக் கொண்ட பூச்சிப் பீடையாவது
(1) பழ ஈ ஆகும். (2) ஏபிட்டு (அழுக்கணவன்) ஆகும்.
(3) அவுலக்கபோரா ஆகும். (4) எப்பிலக்னா ஆகும்.

22. பூச்சிப் பீடைக் கட்டுப்பாட்டில் முக்கியத்துவம் பெறும் இயற்கை எதிரிகளை மட்டும் கொண்ட தெரிவு எது?
(1) தும்பி, செவ்வெறும்பு, சுண்ணாம்பு மூட்டைப் பூச்சி (2) பனிப்பூச்சி, கும்பிடு பூச்சி, சிலந்தி
(3) செவ்வெறும்பு, சிலந்தி, கும்பிடு பூச்சி (4) லேடிபேர்ட் வண்டு, வெண் ஈ, அழுக்கணவன்

23. சான்றுப்படுத்தப்பட்ட (அத்தாட்சிப்படுத்தப்பட்ட) விதை நெல்லில் காணப்பட வேண்டிய ஆகக் குறைந்த முளைதிறன் சதவீதம்,
(1) 85% ஆகும். (2) 90% ஆகும். (3) 95% ஆகும். (4) 99% ஆகும்.

24. பின்வரும் **X, Y** ஆகிய வரிப்படங்களில் வித்து முளைத்தல் முறைகள் இரண்டு காட்டப்பட்டுள்ளன.


X


Y

	X	Y
A	சோளம்	கடலை
B	நெல்	கத்தரி
C	போஞ்சி	கடலை
D	பயறு	மிளகாய்

மேற்படி வரிப்படங்களுக்கு உரிய **X, Y** ஆகிய முளைத்தல் முறைகளுக்கான உதாரணங்களை அட்டவணையில் சரியாகக் கொண்டுள்ள வரிசை,
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

25. வித்துறையில் காணப்படும் வளர்ச்சி நிரோதிகள் காரணமாக, வித்து முளைத்தல் தாமதமடையும் வித்து வகை,
(1) மா ஆகும். (2) புளி ஆகும். (3) பப்பாசி ஆகும். (4) சோளம் ஆகும்.

26. பெகோணியா, பெப்பரோமியா, சன்சவேரியா ஆகிய அலங்கார இலைத் தாவரங்களை இனப்பெருக்க உகந்த மிகப் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது?
(1) தண்டுத் துண்டங்களை நாட்டுதல். (2) வேர்த் துண்டங்களை நாட்டுதல்.
(3) இலைத் துண்டங்களை நாட்டுதல். (4) பதிவைத்தலை மேற்கொள்ளுதல்.

27. ஆப்பொட்டு மேற்கொள்ளப்பட்ட பின்னர், ஒட்டுக்கிளை பொலித்தீன் உறையினால் மூடிக்கட்டப்படுவது,
(1) பூச்சித் தாக்கத்தைக் தவிர்ப்பதற்காகும். (2) நோய்க் கட்டுப்பாட்டுக்காகும்.
(3) ஆவியுயிர்ப்பைக் கட்டுப்படுத்துவதற்காகும். (4) காற்றினால் முறிவடைவதைத் தடுப்பதற்காகும்.

28. அரும்பொட்டுதலின்போது, ஒட்டுக்கட்டையின் மீது T வடிவில் வெட்டு இடப்படின், அதில் பொருத்துவதற்குப் பொருத்தமான ஒட்டுமுளையாக அமையத்தக்க உரு பின்ருவனவற்றுள் எது?

(1)  (2)  (3)  (4) 

29. ஆளுகை நிபந்தனைகளின் கீழான பயிர்ச்செய்கையின்போது பயன்படுத்தப்படும் நிரந்தரப் பாதுகாப்புக் கட்டமைப்பாக அமைவது,
(1) பாத்தி மறைப்பாகும். (2) வரிசையிலான செடி மறைப்பாகும்.
(3) எளிய சூரிய இனப்பெருக்கியாகும். (4) வலையாலமைக்கப்பட்ட இல்லமாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

16104

30. வளிமண்டல நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் எளிய சூரிய இனப்பெருக்கியினுள்,
(1) வெப்பநிலை, ஒளி ஆகியன குறைவாகும்.
(2) சாரீரப்பதன், வெப்பநிலை ஆகியன அதிகமாகும்.
(3) சாரீரப்பதன் குறைவாக இருப்பதுடன் வெப்பநிலை அதிகமாகும்.
(4) சாரீரப்பதன் அதிகமாக இருப்பதுடன் வெப்பநிலை குறைவாகும்.

31. ஒன்றிணைந்த வேளாண்மை பற்றிய சரியான கூற்று யாது?
(1) இது சிறிய அளவிலான நிலங்களுக்குப் பொருத்தமான முறையாகும்.
(2) அடிப்படைச் செலவும் உள்ளீடுகளும் குறைவாகும்.
(3) இதன்போதான ஐயப்பாடு மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகியன குறைவாகும்.
(4) இதற்கு அதிக தொழினுட்ப அறிவு அவசியமன்று.

32. காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் ஏற்படும் அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் தொடர்பான கூற்றுகள் சில வருமாறு
A - தற்போது இலங்கையில் 5% - 10% மான அறுவடைக்குப் பிந்திய இழப்பு ஏற்படுகிறது.
B - விளைச்சல்களை அதிக நேரம் குவித்து வைத்திருப்பதனால் அறுவடைக்குப் பிந்திய இழப்பு அதிகரிக்கும்.
C - விளைச்சல்களைத் தெரிவுசெய்தல், தரப்படுத்தல் ஆகியன காரணமாக அறுவடைக்குப் பிந்திய இழப்பு குறைவடையும்.
இவற்றுள் சரியான கூற்றுகளாவன,
(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) B, C ஆகியன மாத்திரம். (4) A, B, C ஆகிய எல்லாம்.

33. வரம்புசால் பாத்திகளில் நடப்பட சிபார்சு செய்யப்படும் பயிர்கள்,
(1) வற்றாளை, இன்னல, நிலக்கடலை (2) கத்தரி, மிளகாய், தக்காளி
(3) இஞ்சி, மஞ்சள், சோளம் (4) கரட், பீற்றூட், லீக்ஸ்

34. சில நபர்களுக்கு, சில உணவுகளை உண்பதனால் ஒவ்வாமை நிலைமை ஏற்படும். அவ்வாறான உணவு வகைகளாவன,
(1) உருளைக்கிழங்கும் சேப்பங் கிழங்குமாகும். (2) இறாலும் தக்காளியுமாகும்.
(3) பட்டரும் பாலுமாகும். (4) பாணும் சோளமுமாகும்.

35. இவற்றுள் திரவப் பால் நற்காப்புச் செய்தலை சரியாகக் குறிப்பது எதுவாகும்?
(1) திரவப் பால் $\xrightarrow{\text{ஆழ் குளிருட்டல்}}$ யோகட் (2) திரவப் பால் $\xrightarrow{\text{செறிவாக்கல்}}$ தயிர்
(3) திரவப் பால் $\xrightarrow{\text{சிவிறி உலர்த்துதல்}}$ பால்மா (4) திரவப் பால் $\xrightarrow{\text{கிருமியழித்தல்}}$ சீஸ்

36. சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரண்டு போகத்திலும் எந்தவொரு போகத்தில் பயிர்ச்செய்யும்போதும் உரிய வயதில் பலன்தருவன,
(1) நீண்ட பகற்காலத் தாவரங்களாகும்.
(2) குறும் பகற்காலத் தாவரங்களாகும்.
(3) ஒளி நடுநிலைத் தாவரங்களாகும்.
(4) ஒளித் தூண்டற்பேறுடைய தாவரங்களாகும்.

37. பின்வரும் கறவைப் பசு வர்க்கங்களில் சிறப்பான பராமரிப்பின் கீழ் மிக அதிக பாலுற்பத்தியைத் தரும் பசு வர்க்கம் எது?
(1) சிவப்புச் சிந்தி (2) ஜேர்சி (3) பிறீசியன் (4) சகிவால்

38. இலங்கையில் வளர்க்கப்படும் நெற்றி, கால்களின் அடிப்பகுதி வால் ஆகியவற்றில் வெண்ணிறத்தைக் கொண்டதும், வெளிநாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டதுமான எருமை மாட்டு வர்க்கம்,
(1) முறா (2) சூர்த்தி (3) நீலிரவி (4) அயர்சயர்

39. தூற்கற் தன்மை கொண்டனவாகவும் கூட்டமாகவும் காணப்பட்ட கோழிகளின் குதத்தைச் சுற்றிவர வெண்ணிறக் கழிவுகள் ஒட்டியிருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்தக் கோழிகளுக்கு ஏற்பட்டுள்ள நோயாக அமையத்தக்கது,
(1) கொக்சிடியோசிசு (2) புல்லோரம்
(3) ரணிக்கெற்று (4) வட்டப்புழுத் தொற்றுதல்

40. புரொயிலர்க் கோழி வளர்ப்பின்போது, ஒரு கோழிக்கு வழங்கப்பட வேண்டுமெனச் சிபார்சு செய்யப்படும் இடவசதி,
(1) 1/2 சதுர அடியாகும். (2) 1 சதுர அடியாகும்.
(3) 2 சதுர அடியாகும். (4) 3 சதுர அடியாகும்.

**

[பக். 5 ஐப் பார்க்க

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

81 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

කෘෂි හා ආහාර තාක්ෂණය I, II
விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் I, II
Agriculture and Food Technology I, II

விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் II

* **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

1. இலங்கையரின் பிரதான உணவுப் பயிரான நெல்லின் மூலமாக, சக்தித் தேவை பிரதானமாக ஈடுசெய்யப்படுகிறது. முறையாகத் திட்டமிடப்பட்ட வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்வதன் மூலமாக பிற உணவுப் பயிர்களை உற்பத்தி செய்ய முடிவதுடன், குடும்ப அங்கத்தவர்களுக்கு சமநிலையான உணவும் கிடைக்கும்.

(i) குடும்பத்தின் வேளை உணவில் புரதத்தை வழங்குவதற்கென, வீட்டுத் தோட்டத்தில் செய்கைபண்ணக் கூடிய பயிர்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(ii) சிறிய வீட்டுத் தோட்டமொன்றில் இடைப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கெனப் பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(iii) வீட்டுத்தோட்டத்தில் பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, வீட்டிலேயே தயார்செய்யக்கூடிய இரசாயனம் **அல்லாத** பீடைநாசினிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) (a) பாத்தி நாற்றுமேடையுடன் ஒப்பிடுகையில், நெரிடோக்கோ நாற்றுமேடை முறையிலுள்ள அனுகூலம் யாது?

(b) நெரிடோக்கோ நாற்றுமேடை ஊடகக் கலவையைத் தயாரிக்கத் தேவையான பதார்த்தங்கள் மற்றும் அவற்றின் விகிதங்கள் ஆகியவற்றை எழுதுக.

(v) பயிர்களில் ஏற்படும் நைதரசன் குறைபாட்டை நீக்குவதற்கென மண்ணுக்கு இடத்தக்க இரசாயனப் பசளை வகைகள் **இரண்டைப்** பெயரிடுக.

(vi) மண்ணின் நீர்வடிப்புக் குறைவடைவதனால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படத்தக்க **பாதிப்பான** நிலைமைகள் **இரண்டு** எழுதுக.

(vii) (a) மண் கட்டமைப்பு என்பதால் கருதப்படுவது யாது?

(b) இலங்கையில் காணப்படும் பிரதான மண் கட்டமைப்பு வகைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(viii) பாரம்பரிய நெற்பேதங்களுடன் ஒப்பிடுகையில் திருந்திய நெற்பேதங்கள் கொண்டுள்ள இயல்புகள் **இரண்டு** எழுதுக.

(ix) நெற்செய்கையில் களைகள் உருவாவதைத் **தவிர்ப்பதற்குக்** கைக்கொள்ளத்தக்க இரசாயனம் **அல்லாத** நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) முட்டையுற்பத்திக்கென வளர்ப்பதற்குச் சிபாரிசு செய்யப்படும் கோழி வர்க்கங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

2. காலநிலை, மண் ஆகிய சூழற் காரணிகள் இரண்டும் பிரதானமாக பயிர்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்த இரண்டு காரணிகளையும் சரியாக முகாமை செய்வதன் மூலம், வெற்றிகரமாகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும்.

(i) (a) பயிர்ச்செய்கையின்போது மண்ணுக்கு சேதனைப் பசளைகளை இடுவதன் அனுகூலங்கள் **இரண்டு** எழுதுக.

(b) பயிர்ச்செய்கையின்போது மண்ணுக்கு இடப்படும் இரசாயனப் பசளைகளின் வினைத்திறனை அதிகரிக்கத்தக்க **இரண்டு** முறைகளை எழுதுக.

(ii) வானிலை, காலநிலை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விளக்குக.

(iii) கீழே தரப்பட்டிருப்பது, விவசாயமும் உணவுத் தொழினுட்பமும் பாடத்தைக் கற்கும் மாணவரொருவரது களக்குறிப்புப் புத்தகத்திலிருந்து பெறப்பட்ட பூரணப்படுத்தப்படாத அட்டவணையாகும். இந்த அட்டவைணையில் உள்ள A, B, C, D ஆகிய வெற்றிடங்களுக்கு உரிய **தகவல்களை மட்டும்** சரியான ஆங்கில எழுத்துக்களுடன் உங்கள் விடைத்தாளில் குறிப்பிடுக.

காலநிலை வலயம்	பிரதானமாக கிடைக்கும் பருவப்பெயர்ச்சி மழை	அந்த மழை கிடைக்கும் காலப் பகுதி (மாதங்கள்)
ஈரவலயம்	A	B (............ தொடக்கம் .... வரை)
உலர் வலயம்	C	D (............ தொடக்கம் .... வரை)

[பக். 6 ஐப் பார்க்க


3. தாவர பதியமுறை இனப்பெருக்கத்தின்போது சில சமயங்களில் இயற்கைப் பதிய இனப்பெருக்கக் கட்டமைப்புகள் பயன்படுத்தப்படும். இவற்றைவிட மேலதிகமாக, சில தாவரங்களை இனப்பெருக்குவதற்கென தண்டுத் துண்டங்களை நாட்டுதல், ஒட்டுதல், இழையவளர்ப்பு ஆகிய நுட்பமுறைகளும் கைக்கொள்ளப்படும்.

(i) இயற்கைப் பதியக் கட்டமைப்புகள் **இரண்டைப்** பெயரிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணம் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(ii) காற்றுப் பதிவைத்தற் செயன்முறையை, பெயரிடப்பட்ட வரிப்படங்களின் உதவியுடன் விளக்குக.

(iii) (a) இழையவளர்ப்பு மூலம் தாவரங்களை இனப்பெருக்குவதன் அனுகூலங்கள் **இரண்டை** எழுதுக.
(b) தண்டுத் துண்டங்களை நாட்டும்போது வேர்விடலைத் தூண்டுவதற்கெனப் பயன்படுத்தப்படும் ஓமோன் வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

4. உருவில் காட்டப்பட்டிருப்பது, வீட்டிலேயே தயாரிக்கக்கூடிய எளிய மண்ணின்றிய பயிர்ச்செய்கைக் கட்டமைப்பாகும்.



(i) (a) இந்த மண்ணின்றிய பயிர்ச்செய்கை முறையின் பெயர் என்ன?
(b) சாடி A யினுள் பயன்படுத்தக்கூடிய நடுகை ஊடகமொன்றைப் பெயரிடுக.

(ii) (a) கரைசல் B யின் பயன் யாது?
(b) B யிற்கெனப் பயன்படுத்தத்தக்க கரைசல்களுக்கான உதாரணங்கள் **இரண்டு** தருக.

(iii) (a) மண்ணின்றிய பயிர்ச்செய்கையின் அனுகூலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(b) பசுமையில்லத்தினுள் வெப்பநிலை அதிகரிப்பதனைக் கட்டுப்படுத்துவதற்கு, பயன்படுத்தக்கூடிய உத்திகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

5. உணவொன்றை உற்பத்திசெய்தது தொடக்கம், நுகர்வு வரையான எந்தச் சந்தர்ப்பத்திலும் அது பழுதடைதலுக்கு உட்படலாம். ஆகவே, உணவு நற்காப்பு மேற்கொள்ளப்படல் மிக முக்கியமானதாகும்.

(i) (a) உணவு பழுதடைவதற்குக் காரணமான பௌதிகக் காரணிகள் **நான்கைக்** குறிப்பிடுக.
(b) உணவு நற்காப்பின் முக்கியத்துவங்கள் **இரண்டு** எழுதுக.

(ii) (a) 'உணவுக்குப் பெறுமதி சேர்த்தல்' என்றால் என்ன?
(b) உணவுக்குப் பெறுமதி சேர்க்கும் முறைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு அவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் எழுதுக.

(iii) (a) சந்தைக்குச் சமர்ப்பிக்கப்படும் உணவுப் பொதியொன்றின் சுட்டுத்துண்டில் (லேபல்) கட்டாயமாக அடங்கியிருக்க வேண்டிய விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(b) உணவைப் பொதியிடப் பயன்படுத்தப்படும் இயற்கையான பொதியிடும் பதார்த்தங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

6. அறுவடைக்கு பின்னர் விளைச்சலிற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மட்டுமன்றி, அப்பயிருக்கு களத்தில் மேற்கொள்ளப்படும் பின்கண்காணிப்பு நடவடிக்கைகளும் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளில் செல்வாக்குச் செலுத்தும்.

(i) சீரற்ற நீர்ப்பாசனம், சில பயிர்களில் அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும். அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) (a) அறுவடை செய்யப்பட்ட பயிர் விளைச்சல்கள், நுகர்வோரது கைகளுக்குச் செல்லும்வரை அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(b) காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் **நான்கு** எழுதுக.

(iii) சந்தையிலுள்ள கலந்திளக்கம் (கலப்படம்) செய்யப்பட்ட உணவுகளை உண்பதனால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

7. இலங்கையில் பிரதானமாக கோழி, மாடு ஆகிய இரண்டு வகை பண்ணை விலங்குகளுமே அதிகளவில் வளர்க்கப்படுகின்றன.

(i) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மூலம் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள ஆறு கால்நடை வளர்ப்பு வலயங்களில் **நான்கைக்** குறிப்பிடுக.

(ii) பசுவொன்றினால் வெளிக்காட்டப்படும் வேட்கை அறிகுறிகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) குஞ்சு வதியினுள், கோழிக் குஞ்சுகள் பரந்து காணப்படும் விதத்துக்கமைய அதனுள் நிலவும் வெப்பநிலை பற்றி எம்மால் உய்த்தறிய முடியும். நிலக் குஞ்சுவதியினுள் சிறப்பான அளவு, குறைந்தளவு, கூடியளவு வெப்பநிலைகள் நிலவும்போது குஞ்சுவதியினுள் கோழிக்குஞ்சுகள் பரந்து காணப்படும் விதத்தை வரிப்படங்கள் மூலம் விளக்குக.

***